**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 23/2022</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **15.07.2026** |
| **பெயர்** | **பாரி** |
| **த/பெ** | **மாசிலாமணி** |
| **சாட்சி** | **DW2** |

**விசாரணை தொடங்கும் நேரம் – 03.07.p.m**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. நான் இவ்வழக்கின் இரண்டாம் பிரதிவாதியாவேன். 1–ம் பிரதிவாதியான தாஸ் என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன். 3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் என்னுடைய தம்பிகள். இந்த வழக்கை தாக்கல் செய்த வாதிகள் கணவன், மனைவி என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் எனக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழிப்பாட்டை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அவர்களுக்கு சொந்தமான சொத்தில் நாங்கள் இடையூறு செய்யக் கூடாது என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

2. வழக்கில் 7 அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன அயிட்ட சொத்துக்களுக்கு 4 எல்லைகள் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் வாதிக்கு சொந்தமானது என்று காண்பிக்க அந்த கிரைய ஆவணங்களை அவர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் கூறும் வழிப்பாட்டை எங்கு ஆரம்பித்து எங்கு முடிவடைகிறது என்றால் சர்வே எண் 209–ல் இருந்தது தற்போது அதனை வாதி ஹரிதாஸ் பட்டா எண் 511 ஆக வாங்கியுள்ளார். கிராமநத்தம் மற்றும் பட்டா நிலங்களுக்கு கிரைய வாங்கிய பத்திரங்கள் அடிப்படையில் அவரவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். வாதியின் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவும் அவரின்

பத்திரத்தின் அடிப்படையில் தான் வழங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும்.

3. வழியோடு சேர்த்து வாதி கிரையம் பெற்றது செல்லாது என்று பத்திரப்பதிவு அலுவலகத்தில் ஏதேனும் ஆட்சேபணை செய்தேனா என்றால் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. வாதி பொது வழியோடு பட்டா வாங்கியுள்ளதை குறித்து ஆட்சேபணை செய்து வருவாய் துறையில் ஏதேனும் மனு செய்தேனா என்றால் இல்லை. தனிப்பட்ட முறையில் வாதி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் மற்றும் பட்டா செல்லாது என்று நான் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கூறும் வழியின் உரிமை எனக்கு சொந்தமானது என்று காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு பிப்ரவரி 2022–ல் வாதியின் ஸ்வாதீனத்தில் இடையூறு செய்ததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வாதி தான் பிரச்சனை செய்தார்.

4. வழி உரிமை குறித்து கிராமத்தில் மத்தியஸ்தம் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் எந்த தேதியில் யார் முன்னிலையில் மத்தியஸ்தம் செய்தார்கள் என்றால் கமலக்கண்ணன் மற்றும் மணிரெட்டியார் முன்னிலையில் மத்தியஸ்தம் செய்யப்பட்டது. தேதி நினைவில் இல்லை. மத்தியஸ்தத்தில் யார், யார் பங்கேற்றார்கள் என்றால் எங்களின் பங்காளிகள் தான் மத்தியஸ்ததிற்கு வந்தார்கள். அந்த மத்தியஸ்தத்தில் வாதிகள் எழுத்து மூலமாக அந்த வழியை விட்டுக்கொடுப்பதாக எழுதிக் கொடுத்தார்களா என்றால் தேவராஜ்ரெட்டியாரும் , ரவக்கிளி அம்மாளும் சேர்ந்து எழுதிக் கொடுத்தார்கள். அவர்கள் எழுதிக்கொடுத்த அசல் ஆவணம் என் வசம் உள்ளதா என்றால் உள்ளது. நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அவ்வாறு எழுத்து மூலமான எந்த ஆவணமும் வழியை பொருத்து மத்தியஸ்தத்தில் எழுதவில்லை என்றால் சரியல்ல.

5. வருவாய் துறை ஆவணங்களில் சர்வே எண் 511/12–ல் பாதை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன பாதையை நான் மறித்து வீடு கட்டிவிட்டதால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி கிரையம் பெற்ற பட்டா நிலத்தில் சட்டத்திற்கு புறம்பாக வழியை ஆக்கிரமித்து வீடு கட்டிவிட்டதால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 10/2021 இவ்வழக்கின் வாதியான ஹரிதாஸ் என்பவர் எனக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 10/2021 ல் வாதிக்கு கிரையம் கொடுத்த சரோஜம்மாள் மற்றும் பங்கஜமாளும் 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளாக காண்பிக்கப்பட்டுள்ளாரகள் என்றால் சரிதான்.

6. அந்த வழக்கில் சரோஜம்மாள் சாட்சியாக வந்து சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். வாதியின் வழி உரிமையை மறுத்து 2020–ல் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் ஒன்று என் பெயருக்கு ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரம் வாதியின் வழி உரிமையை மறுக்கும் கெட்ட எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வாதி மோசடியாக பட்டா வாங்கியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதனை எதிர்த்து வருவாய் துறையில் எந்த மனுவும் செய்யவில்லை என்றால் செய்யவில்லை. வாதி கிரையம் பெற்ற சொத்து என்பதால் தான் மேற்சொன்ன பட்டாவை நான் எதிர்க்கவில்லை என்றால் சரியல்ல.

7. என் பிரமாணவாக்குமூலத்தில் பங்காளி உறவுமுறை குறித்து குறிப்பிட்டுள்ளேன் அவை இவ்வழக்கிற்கு தேவையற்றவை என்றால் தெரியவில்லை. என் பதிலுரையில் ஒவ்வொரு அட்டவணைக்கும் தனித்தனியாக நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அதற்கான அவசியம் இல்லை என்றும் ஒரே பரிகாரமாக கோரி ஒரே நீதிமன்ற கட்டணம் செலுத்தினால் போதும் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் வாதிகள் அவர்கள் பெயரில் போதுமான ஆவணங்களை வைத்து நிரூபித்துள்ளார்கள் அதனை எதிர்த்து நாங்கள் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாத காரணத்தினால் விளம்புகை பரிகாரம் கோர அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வாதி கறைபடிந்த கைகளோடு இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும் முறையான ஆவணத்தை கொண்டே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எனது நிரூபணவாக்குமூலத்தின் அடிப்படையில் பிரதிவாதிகளின் உரிமையை நிலைநாட்டும் வகையில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**விசாரணை முடியும் நேரம். 03.38.p.m**